# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 52/2024

| | |
|---|---|
| | Prosecution PW 3 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கிஷோர்குமார் |
| Father's Name | : | சேகரன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 29.04.2025

**எதிரி ஆஜர்**.

**முதல் விசாரணை**

நான் கணேசபுரத்தில் குடியிருந்து கோயம்புத்தூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 02.07.2022 ம் தேதி இரவு சுமார் 09.15 மணியளவில் கரூர் - திருச்சி பைபாஸ் சாலையில் கும்கி ஹோட்டல் அருகே நின்றுகொண்டிருந்தேன். அப்போது கரூரிலிருந்து திருச்சி ஈச்சர் டிப்பர் லாரி சென்றது. லாரி வேகமாக சென்று

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

எந்தவிதமான சைகையும் செய்யாமல் திடீரென பிரேக் அடித்ததால் பின்னால் வந்த பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் வந்த குருசாமி லாரியின் பின்பகுதியில் மோதினார். அதனால் அவருக்கு நெற்றி, நெஞ்சு, கழுத்து பகுதியில் காயம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு நானும் ரமேசும் சென்று பார்த்தோம். பின்னர் அவரது குடும்பத்தாருக்கு தகவல் சொல்ல சென்றார். நான் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் மூலம் அடிபட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அவர் இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். ஈச்சர் டிப்பர் லாரியின் பதிவு எண். TN 47 AM 8114 ஆகும். பிளாட்டினா இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 47 Y 2056 ஆகும். ஈச்சர் டிப்பர் லாரியின் ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டதால் நான் அவரை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 52/2024

| | |
|---|---|
| | Prosecution PW 4 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | முனியப்பன் |
| Father's Name | : | மாணிக்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 29.04.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கீரனூரில் குடியிருந்து இருசக்கர வாகன மெக்கானிக் கடையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் பாலசுப்பிரமணியன் என்பவர் கையொப்பம் செய்தார். புலயூர் கும்கி ஹோட்டல் அருகே 02.07.2022 ம் தேதி நடந்த விபத்து சம்மந்தமாக 03.07.2022 ம்

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

தேதி காலை 08.00 மணியளவில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது பசுபதிபாளையம் போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், பாலசுப்பிரமணியனும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**